சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

மனு எண். எம்.சி.ஓ.பி. 33/2021

PW - 1

2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 19 ம் நாள் வெள்ளிக்கிழமை (1989 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி) திரு.எம்.மணிகண்டன், எம்.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | சுந்தரராஜ் என்கிற சுந்தரராஜன் |
| க.பெ. (அ) த.பெ. | கிருஷ்ணசாமி |
| வயது | 75 |
| முகவரி | ஆனைமலை |

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நான் சத்தியப்பிரமாணமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எனது பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

1.மசாஆ 1 - ஆனைமலை காவல் நிலைய முதல் தகவல் அறிக்கையின் உண்மை நகல்.

2.மசாஆ 2 - TN 41 AT 6886 பல்சர் மோட்டர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை உண்மை நகல்.

3.மசாஆ 3 - KL 09 P 9339 TVS 50 Moped வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை உண்மை நகல்.

4 மசாஆ 4 - TN 41 AT 6886 பல்சர் மோட்டர் வாகனத்தின் இன்சூரன்ஸ் புகைப்பட நகல்

5.மசாஆ 5 - அம்பராம்பாளையம் ஆல்வா மருத்துவமனையில் வழங்கப்பட்ட மருத்துவபில்கள் ரூ.99,354.98/- (எண்ணிக்கை 38) ( அது ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)

6.மசாஆ 6 - அம்பராம்பாளையம் ஆல்வா மருத்துவமனையில் வழங்கப்பட்ட டிஸ்சார்ஜ் சம்மரி

7.மசாஆ 7 - எனது ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது)

8.மசாஆ 8 - எனது பான் கார்டு நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது)

9.மசாஆ 9 - எனது வங்கி கணக்கு புத்தகம் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது)

**(இதர ஆவணங்கள் குறியீடு செய்ய வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி